DINAMANI

PAGE NO: 04

DATE: 18.12.2023

# புதுவைப் பல்கலைக்கழகத்தில் பரதநாட்டிய அகாதெமி தொடக்கம்

புதுச்சேரி, டிச.17: புதுவைப் பல்கலைக்கழக நிகழ்கலை பள்ளியில் பரதநாட்டிய அங்கீகார அகாதெமி தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

புதுவைப் பல்கலைக்கழகம் பரதநாட்டிய அங்கீகார அகாதெமி எனும் புதிய மையத்தை சங்கமம் குளோபல் அகாதெமியுடன் இணைந்து நிகழ்கலை பள்ளியில் தொடங்கியுள்ளது. இதன் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. இதில், பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) தரணிக்கரசு பங்கேற்று, பரதநாட்டிய அங்கீகார அகாதெமியை தொடங்கிவைத்தார். பரதநாட்டிய பயிற்சி நிறுவனங்கள் தங்களுடைய மாணவர்களின் தேர்ச்சிக்கான சான்றிதழ்களைப் பெற இந்த அகாதெமியை அணுகலாம் என புல முதன்மையர் ஸ்ரீதரன் விழாவில் தெரிவித்தார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) ராஜேஷ் பூட்டானி, சங்கமம் குளோபல் அகாதெமி நிறுவனர் க.தினேஷ்குமார், இயக்குநர் கோ. வெம்மணிசெல்வி, ஒருங்கிணைப்பாளர் குரு.உமா மகேஸ்வரி, பாரதியார் பல்கலைக்கூட நடன துறைத் தலைவர் லூர்துசாந்தி மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நூல் வெளியீடு:** விழாவில் பேராசிரியர் வேலு சரவணன் எழுதிய 'திபுலான் வாராதி' எனும் சிறுவர் நாவலை துணைவேந்தர் (பொ) தரணிக்கரசு வெளியிட்டார். இதன் முதல் பிரதியை பதிவாளர் (பொ) ராஜேஷ் பூட்டானி பெற்றுக்கொண்டார்.